தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தனது 25.11.2016 நாளிட்ட அறிவிக்கை எண்கள் 21/2016 மற்றும் 22/2016 மூலம் முறையே செயல் அலுவலர் - நிலை III மற்றும் செயல் அலுவலர் - நிலை IV ஆகிய பதவிகளுக்கான அறிவிக்கைகளை வெளியிட்டிருந்தது. மேற்படி தேர்வுகளுக்கான எழுத்துத் தேர்வு 29.04.2017 மற்றும் 30.04.2017 ஆகிய தேதிகளில்நடத்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. இதனிடையே ஆசிரியர் தேர்வு வாரியத்தால் ஆசிரியர் தகுதித் தேர்வும் (Teachers Eligibility Test) 29.04.2017 மற்றும் 30.04.2017 தேதிகளில் நடைபெறும் என தற்போது அறிவிப்பு வெளியிட்டுள்ளமையால், தேர்வு எழுதும் விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு, செயல் அலுவலர் - நிலை III மற்றும் செயல் அலுவலர் - நிலை IV ஆகிய இருதேர்வுகளையும் தொடர் இரு நாட்களில் நடத்த ஏதுவாக, விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற் பயிற்சி அலுவலர் தேர்வை முன்னதாகவும், தேர்வாணையம் ஏற்கனவே அறிவித்துள்ள தேர்வுத் தேதிகளிலிருந்து மாற்றியமைத்து கீழ்க்கண்டவாறு அறிவிக்கிறது.

| வ. எண் | அறிவிக்கை எண் மற்றும் நாள் | பதவி | மாற்றம் செய்யப்பட்ட தேர்வுத் தேதி |
|---|---|---|---|
| 1. | 02/2017,நாள்:08.02.2017 | விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற் பயிற்சி அலுவலர் (Hostel Superintendent cum Physical Training Officer) | 20.05.2017 மு.ப & பி.ப |
| 2. | 21/2016, நாள்:25.11.2016 | செயல் அலுவலர் - நிலை- III (தொகுதி -VII) (Executive Officer – Grade –III included in Group VII services) | 10.06.2017 மு.ப & பி.ப |
| 3. | 22/2016,நாள்:25.11.2016 | செயல் அலுவலர் - நிலை (தொகுதி -VIII) (Executive Officer – Grade –IV included in Group VIII services) | 11.06.2017 மு.ப & பி.ப |

செயலாளர்